**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 292/2012**

**Witness PW 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அஞ்சலையம்மாள் | தொழில் | |
| க/பெ | இருசன் | வயது | |
| ஊர் | | தேதி | 24.10.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (24.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

எனது மாமனார் பெயர் லட்சுமணன் என்றால் சரி . அவருக்கு ஆறுமுகம் , வீரப்பன் சக்திவேல் இருசன் என 4 மகன்கள் என்றால் சரி. பெரியநாயகம் காளியம்மாள் என இரண்டு மகள்கள் என்றால் சரி. எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பே காளியம்மாள் என்பவருக்கு திருமணம் நடந்துவிட்டது என்றால் சரி . பெரியநாயகம் என்பவர் காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரி நாங்கள் தான் திருமணம் செய்து வைத்தோம் . எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்பது நியாபகம் இல்லை . எனது மகள் பார்வதி எந்த வருடம் பிறந்தார் என்பது எனக்கு நியாபகம் இல்லை . எனது மகள் பிறப்பதற்கு முன்பே பெரியநாயகம் என்பவருக்கு திருமணம் முடிந்துவிட்டது என்றால் சரி. எனக்கும் ஆறுமுகம் என்பவருக்கும் திருமணம் நடைபெற்ற பிறகு தான் புட்லாய் மற்றும் இருசன் ஆகியோருக்கு திருமணம் நடைபெற்றதுஎ ன்றால் இல்லை . புட்லாய் மற்றும் இருசன் ஆகிகயோருக்கு பிறந்தவர்கள் தான் குமரவேல், அரசாய், சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர் என்று சொன்னால் சரி . எனது கணவரின் சகோதரரான சக்திவேல் ,வீரப்பன் ஆகியோர் திருமணம் நடைபெறாமல் இறந்துவிட்டார் என்று சொன்னால் வீரப்பன் என்பவருக்கு திருமணம் நடந்துவிட்டது சக்திவேல் என்பவருக்கு திருமணம்

நடைபெறாமல் இறந்துவிட்டார். வீரப்பன் மற்றும் சக்திவேல் ஆகியோருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரி . எனது கணவர் ஆறுமுகம் என்பவர் எனது மாமனார் லட்சுமணன் என்பவர் இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரி . எனது கணவர் ஆறுமுகம் என்பவரது இறப்புச் சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு இறப்புச்சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. எனது மாமனார் லட்சுமணன் என்பவர் இறக்கும்போது இருசன் என்பவர் மட்டும் தான் உயிருடன் இருந்தார் என்றால் சரி. வழக்கு சொத்து முழுவதும் லட்சுமணன் என்பவருக்கு உரிமையான சொத்து என்றால் சரி. லட்சுமணன் அவரது சொத்தை இருசன் என்பவருக்கு கொடுத்தார் என்றால் இல்லை . எனது மாமனார் உயிருடன் இருந்த போது இருசன் என்பவருக்கு சொத்தினைகொடுத்துவிட்டதால் தான் அவர் அதனை அடமானம் வைத்தார் என்றால் இல்லை. வழக்கு சொத்தின் பட்டா இருசன் என்பவரது பெயரில் மாறிவிட்டது என்றால் இல்லை. எனது சொந்த ஊர் ஆண்டிப்பாளையம் என்றால் சரி . எனது கணவர் இறந்த பிறகு நான் ஆண்டிபாளையம் சென்றுவிட்டேன் என்றால் இல்லை . எனது மாமனாருடன் தான் இருந்தேன். எனது கணவர் இறந்தபிறகு என்னை எனது மாமனாரும் இருசன் என்பவரும் தான் பார்த்துக்கொண்டனர் என்றால் சரி . எனது மகன் முருகன் என்பவர் ஆண்டிபாளையத்தில் தான் பிறந்தார் என்றால் இல்லை கோலியனூரில் பிறந்தார். இந்த வழக்கில் என்ன என்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எ ன்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ 5 ஆவணத்தில் எனது மகன் ஆண்டிபாளையத்தில் தான் பிறந்தார் என்று உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல . கோழிப்பாக்கம் என்பது எனது ஊர் ஆண்டிப்பாளையத்திற்கு பக்கத்து ஊர் என்றால் சரி . எனது மகன் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரி. கோழிபாக்கம் அரசு பள்ளியில் தான் எனது மகன் படித்தார் என்றால் சரி. கோலிப்பாக்கம் மற்றம் பனங்குப்பத்திற்கும் இடையே சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . நான் ஆண்டிபாளையத்திலிருந்து இருந்து கொண்டு கோழிப்பாக்கத்தில் படிக்க வைத்தேன் . எனது கணவர் இறந்த பிறகு எனது மாமனார் மற்றும் இருசன் ஆகியோர் எனக்கு பணம் கொடுத்து தான் ஆண்டிபாளையத்திற்கு அனுப்பி வைத்தனர் என்றால் இல்லை . எனக்கு பணம்

கொடுப்பதற்காகதான் 1988 ம் வருடம் சொத்தினை அடமானம் வைத்தார் என்றால் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு அடமானம் வைத்தார் என்றால் 1500 ரூபாய்க்கு அடமானம் வைத்தார். ரூ. 2000/-த்திற்கு அடகு வைத்து அதில் எனக்கு ரூ. 1500 கொடுத்ததால் நான் ரூ. 1500 என்று சொல்கின்றேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக பணம் வாங்கவில்லை என்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . புட்லாய் என்பவர் தான் அவருக்கு சீதனமாக கொடுத்த பொருட்கள் விற்று அடமான கடனை அடைத்தார் என்றால் இல்லை . இருசன் என்பவர் அவரது மகன் குமரவேல் என்பவருக்கு சொத்தினை எழுதி வைத்தார் என்றால் இல்லை . இருசன் என்பவர் அவரது மகன் குமரவேல் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தது அந்த தேதிலேயே எனக்கு தெரியும் என்று சொன்னால் அவ்வாறு எழுதி வைக்கவில்லை. எனக்கு ஆவணம் எழுதி வைத்தது தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்று சொன்னால் இல்லை . 2012 ம் வருடம் குமரவேல் என்பவர் சாந்தி என்பவருக்கு பத்திரம் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரியும். அரசாய் என்பவர் 05.05.1977 தேதி பிறந்தார் என்றால் இல்லை எனது மகன் தான் முன்னாள் பிறந்தார் . புட்லாய் என்பவர் தான் இருசன் என்பவரது மனைவி என்று சொன்னால் இல்லை . பாக பிரிவினை செய்ய வேண்டும் என்று பிரதிவாதியிடம் எந்த தேதியில் கேட்டேன் என்ற விவரத்தை வழக்குரையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் நான் பிரதிவாதிகளிடம் கேட்கவில்லை நீதிமன்றத்தில் தான் கேட்டுள்ளேன் . வாய்மொழி பாக பிரிவினை பேரில் நான் எனது பாகத்திற்கு உரிய பணத்தை பெற்றுகொண்டேன் என்பதால் வழக்கு சொத்தானது இருசன் என்பவருக்கு மட்டுமே உரிமையான சொத்து என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழி பாக பிரிவினை அமலுக்கு வந்துவிட்டது என்பதால் தான் இருசன் என்பவர் 2 ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் இல்லை. எனக்கும் இருசன் என்பவருக்கும் எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல . முருகன் என்பவர் இருசன் என்பவருக்குகு பிறந்த மகன் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பாக பிரிவினை கோர எனக்கும் மற்ற வாதிகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**5 முதல் 8 வது பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி விசாரணை குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram